5. கிருப கிருப கிருப தேவ கிருப

பல்லவி

கிருப கிருப கிருப தேவ கிருப
கிருப கிருப கிருப தேவ கிருப

அனுபல்லவி

*கிருபையினால் என் வாழ்க்கை வாழுது*
*கிருபையினால் என் ஓட்டம் ஓடுது*

சரணங்கள்

1. பெலவீனத்தில் பெலமே உம் கிருப
   சுகவீனத்தில் சுகமே உம் கிருப
   - கிருபையினால்

2. தாழ்விலே உயர்ந்திருப்பது கிருப
   குறைவிலே மகிழ்ந்திருப்பது கிருப
   - கிருபையினால்

3. பாடுகளை சகிக்க வைக்கும் கிருப
   சோதனையை ஜெயிக்கவைக்கும் கிருப
   - கிருபையினால்

4. பணமோ பொருளோ உமது கிருப
   பட்டம் படிப்போ உமது கிருப
   - கிருபையினால்